புதுச்சேரி அரசு

துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2024** **03 ஜனவரி, 2024**

## பத்திரிகை செய்தி

புதுச்சேரி அரசு, பொதுப்பணித்துறையில் புதிதாக பணி நியமனம் செய்யப்பட்டுள்ள இளநிலை பொறியாளர் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு பணி நியமனம் ஆணை வழங்கும் நிகழ்ச்சி மற்றும் ஒருங்கிணைந்த குடிநீர் இணைப்பு, கணக்கீடு, வரி & கட்டண வசூல் இணையதள சேவை தொடக்க விழா கருவடிக்குப்பம் காமராஜர் மணிமண்டபத்தில் இன்று (03.01.2025) நடைபெற்றது.

மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K. கைலாஷ்நாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் திரு ந. ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் திரு R. செல்வம், பொதுப்பணித்துறை அமைச்சர் திரு க.லட்சுமிநாராயணன் ஆகியோர் முன்னிலையில் பணிநியமன ஆணைகளை வழங்கி சிறப்பித்தார். மேலும், ஒருங்கிணைந்த குடிநீர் இணைப்பு, கணக்கீடு, வரி & கட்டண வசூல் இணையதள சேவையைத் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில், தலைமைச் செயலர் திரு சரத் செளகான், பொதுப்பணித்துறை செயலர் திரு திரு ஜெயந்த குமார் ரே, துணைநிலை ஆளுநரின் செயலர் திரு நெடுஞ்செழியன், பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் திரு தீனதயாளன், உயர் அதிகாரிகள் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் துணைநிலை ஆளுநர் பேசிதாவது..

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். ஏனென்றால், 'BEST PUDUCHERRY' -யை உருவாக்கும் நம்முடைய முயற்சிக்கு வலு சேர்க்கவும், பாரதப் பிரதமரின் தொலைநோக்குப் பார்வையாக "வளர்ச்சி அடைந்த பாரதம் 2047" VIKSHIT BHARAT 2047 உருவாக்குவதில் புதுச்சேரி மாநிலத்தின் பங்களிப்பை உறுதி செய்யவும் மற்றுமொரு இளைஞர் பட்டாளம் இங்கே வந்திருக்கிறீர்கள்.

நான் ஏன் அவ்வாறு சொல்கிறேன் என்றால் ஒரு நாட்டின் சமுதாய-பொருளாதார வளர்ச்சியில் ENGINEER களின் பங்கு அந்த அளவிற்கு முக்கியமானது. ஒரு நாட்டின் உள்கட்டமைப்பு சிறப்பாக இருந்தால்தான் அங்கே பொருளாதார வளர்ச்சி ஏற்படும். அந்த உள்கட்டமைப்பு வளர்ச்சி உருவாக்கும் பணி உங்களைப் போன்ற துடிப்பும் திறமையும் உள்ள தொழில்நுட்பம் தெரிந்த ENGINEER-களின் கையில்தான் இருக்கிறது. ENGINEER -கள் நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு வேகமாக கொண்டு செல்ல முடியும்.

அந்த வகையில் புதுச்சேரியின் உள்கட்டமைப்பு வளர்ச்சி வரலாற்றில் உங்களுடைய பங்கும் இருக்கும். துடிப்போடும் திறமையோடும் வந்திருக்கும் உங்களைப் போன்ற இளைஞர்களுக்கு என்னுடைய கைகளால் Appointment Orders தருவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் அனைவருக்கும் முதலில் என்னுடைய வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் அனைவரும் புதுச்சேரி அரசு நடத்திய தேர்வுகளில் வெற்றி பெற்று JUNIOR ENGINEERS ஆக OVERSEERS ஆக பணியில் சேர இங்கே வந்திருக்கிறீர்கள். இது

உங்களுடைய வாழ்க்கையில் ஒரு மைல்கல். உங்களுடைய முயற்சிக்கும் உழைப்புக்கும் கிடைத்த வெற்றி என்றுதான் சொல்ல வேண்டும்.

பொதுவாக, புதுச்சேரி PUBLIC WORKS DEPT. இன் செயல்பாடுகள் பற்றி நம் அனைவருக்கும் தெரியும். BUILDINGS, ROADS, BRIDGES, DAMS, LAKES-PONDS, CANALS, WATER SUPPLY என்று மாநிலத்தின் உள்கட்டமைப்பு INFRASTRUCTURE மேம்படுத்துவதில், பாதுகாப்பதில் PUBLIC WORKS DEPT. இன் பங்கு அதிகம். அந்த அளவிற்கு மக்களின் வாழ்க்கை முறையோடு நேரடியாக தொடர்பு கொண்டது. PUBLIC WORKS DEPT.

அண்மையில் ஏற்பட்ட பெருமழை மற்றும் ஃபெங்கல் புயலின் போது பொதுப்பணித்துறை அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் பணியை பாராட்டாமல் இருக்க முடியாது. பேரிடர் காலத்தில், அர்ப்பணிப்யோடு செயல்பட்டு விரைவாக மக்களின் இயல்பு வாழ்க்கையை கொண்டு வந்ததை நாம் பார்த்தோம்.

இன்று - நேற்று அல்ல FRENCH ஆட்சி காலத்தில் இருந்தே பொதுப்பணி துறையின் பங்களிப்பை நாம் இன்றும் பார்க்க முடிகிறது. அந்த கட்டிடங்களை, எரிகளை, புதுச்சேரியின் நகர அமைப்பை எல்லாம் பார்க்க சுற்றுலாப் பயணிகள் உலகம் எங்கும் இருந்து வந்து கொண்டு இருக்கிறார்கள்.

புதிதாக அரசு பணியில் சேரும் இளைஞர்களிடம் நான் கேட்டுக் கொள்வதெல்லாம்... நீங்கள் எல்லோரும் இன்று நடைமுறையில் உள்ள புதிய தொழில்நுட்ப அறிவோடு வந்து இருக்கிறீர்கள். இன்னும் தொழில்றுட்ப சிறப்பு துறைகளில் உங்கள் அறிவை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். உங்கள் அறிவும் செயல் திறனும் புதுச்சேரியை மேம்படுத்த உதவ வேண்டும். படித்த இளைஞர்களுக்கு அரசு பணி என்பது வெறும் வாழ்வாதாரமாக மட்டும் அல்ல. அது மக்களுக்கு சேவை செய்ய நமக்கு தரப்படும் வாய்ப்பு – பொறுப்பு. (SOCIAL RESPONSIBILITY) என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

நான் IAS முடித்து முதல் முதலாக பணியில் சேர்ந்த போது, என் நாட்டுக்கும் மக்களுக்கும் என்னால் முடிந்த வரை சேவை செய்ய வேண்டும் என்ற ஒரு உற்சாகத்தோடு சேர்ந்தேன். அதன் பிறகு என்னுடைய 45 ஆண்டு கால சேவையில் என்னால் முடிந்த வரை அதை செய்திருக்கிறேன் என்ற நிறைவு எனக்கு இருக்கிறது. இங்கும், புதுச்சேரி மக்களுக்காக அப்படி சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் பொறுப்பு ஏற்று இருக்கிறேன். அதை நோக்கி பயணம் செய்து கொண்டு இருக்கிறேன்.

இன்று நீங்கள் பணியில் சேர்ந்து சில வருடம் கடந்து பிறகு உங்களுக்கும் நீங்கள் செய்த பணி உங்களுக்கு ஒரு மன நிறைவை தர வேண்டும். அதற்காக நீங்கள் உங்களை தயார்படுத்திக் கொள்ளுங்கள்.

வளர்ந்து வரும் புதிய தொழில்நுட்ப அறிவை புதிய நடைமுறைகளை தெரிந்து கொள்ளுங்கள். உங்களை தினமும் புதுப்பித்துக் கொள்ளுங்கள். ஆர்வத்தோடும் அர்ப்பணிப்போடும் பணியாற்றுங்கள். மூத்த அதிகாரிகளிடம் இருந்து கற்றுக் கொள்ளுங்கள். சக ஊழியர்களோடு ஒத்துழைப்போடு நடந்து கொள்ளுங்கள். உங்களுக்கு பின்னால் வருபவர்களுக்கு நல்ல முன்னுதாரணமாக இருக்க வேண்டும் என்பதை மனதில் வையுங்கள். உங்கள் பணியை நேசியுங்கள். நீங்கள் வெறும் கட்டிடத்தை மட்டும் கட்டப் போவதில்லை. உங்கள் மீதான மக்களின் நம்பிக்கையை வளமான பாரதத்தை உருவாக்கப் போகிறீர்கள்.

அது நாட்டுக்காக மட்டும் அல்ல உங்களுடைய பெற்றோர்களுக்கும் பொருமை சேர்க்கும்.